செய்தி வெளியீடு எண். 118 நாள். 26.02.2018

**மக்கள் குறை தீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ,ப., அவர்கள் ரூ. 97 ஆயிரத்தி 745 மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்**

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மக்கள் குறை தீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (26.02.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொது மக்களின் கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெற்றுக் கொண்டார். மேலும், இக்கூட்டத்திற்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை புரிந்த பொதுமக்கள் தங்களது தனிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்யவும், உதவிகள் வழங்கிடவும் கோரி மனுக்களை அளித்தனர். இதில் நிலம் சம்பந்தமாக 7

9 மனுக்களும், சமூக பாதுகாப்பு திட்டம் 64 மனுக்களும், சமூக நலத்திட்டம் 1 மனுவும், வேளாண்மை / கால்நடைத்துறை / மீன்வளம் 3 மனுக்களும், ஆதிதிராவிடர் / பிற்படுத்தப்பட்டோர் நலம் 1 மனுவும், வேலைவாய்ப்பு 27 மனுக்களும், சட்டம் மற்றும் ஒழுங்கு 21 மனுக்களும், சான்றிதழ் 1 மனுவும், இதரதுறை 48 மனுக்களும், உழவர் பாதுகாப்புத்திட்டம் 1 மனுவும், அடிப்படை வசதி / போக்குவரத்து / சுகாதாரம் 5 மனுக்களும், ஊரக / நகர்ப்புற வளர்ச்சி 15 மனுக்களும் மற்றும் கடனுதவி 12 மனுக்களும் ஆக மொத்தம் 278 மனுக்கள் பெறப்பட்டது. இம்மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, தகுதியுள்ள பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இன்று முன்னாள் படைவீரர் நலத்துறை சார்பாக 3 நபர்களுக்கு திருமண உதவித்தொகை மற்றும் 2 நபர்களுக்கு ஈமச்சடங்கு உதவித்தொகை என மொத்தம் ரூ. 75 ஆயிரமும், அனைவருக்கும் கல்வி இயக்கம் சார்பாக உலக சிக்கன நாள் தொடர்பாக திருவள்ளூர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட அளவிலான போட்டிகள் நடைப்பெற்றதில் கலந்துகொண்டு வெற்றிப்பெற்ற 42 மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களும், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) சார்பாக 1 நபருக்கு கருணை அடிப்படையில் திருத்தணி ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராக பணிநியமன ஆணையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் சார்பாக 5 நபர்களுக்கு விலையில்லா சலவை பெட்டிகள் ரூ.22,745 மதிப்பிலும் ஆக மொத்தம் ரூ. 97 ஆயிரத்தி 745 மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ர.சக்திவேல், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.சீ.ஜானகிராமன், மாவட்ட வழங்கல் அலுவலர், துணை ஆட்சியர் (பயிற்சி) திருமதி. பிரீத்தி மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**